# தாரணி



# அறிமுகம்

*இவ்விசேட பயிற்சி செயலமர்விற்காக பயிற்சி கைநூல் ஒன்றினை தயாரிப்பதும் பயிற்சி செயலமர்வுகளை நடைமுறைப்படுத்துலும் காலத்தின் தேவையாக உள்ளதென நாம் நினைக்கின்றோம். இதற்காக பலர் பலவிதமான முயற்சிகள் மேற்கொண்டிருந்தாலும் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியவில்லை.*

*அதற்கமைய அபிவிருத்தி செயற்பாட்டிற்கு பெண்களை பங்கேற்க செய்யும் செயற்திறனான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம் முன்வந்துள்ளது*

*முப்பது வருட கால யுத்தத்தின் முடிவின் பின் இலங்கை இன்று மிக முக்கியமான ஒரு தருணத்தில் உள்ளது. இலங்கையின் நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்திக்காக பெண்களின் கூடிய பங்களிப்பை பெற்றுக்கொள்வது அவசியமாகும். எனவே இது அதற்காக மேற்கொள்ளும் ஓர் முயற்சியாகும்.*

**••• தாரணி •••**

**முன்னுரை**

‘‘அன்றும் இன்றும் பெண்கள்’’ எனும் தலைப்பை பகுப்பாய்வு செய்வதன் ஊடாக சமாதானம், பாதுகாப்பு, மற்றும் அபிவிருத்திற்காக இலங்கை வாழ் மக்கள் அனைவரினதும் பங்களிப்பபை பெற்றுக்கொள்வதற்கான பயிற்சி கைநூலாகும்.

**‘‘மானிட சமூகத்தின் அனைத்து கஸ்ட நஸ்டங்களையும், இன்ப துன்பங்களையும் ஒரு சுமை தாங்கியாய் பூமித்தாயைப்போல தாங்கி நிற்கும் அவள் : அன்புத் தாயாய் பண்புமிக்க தாரமாய், பாசமுள்ள சகோதரியாய், பரிவுள்ள மகளாய், நேசமுள்ள சினேகிதியாய் நம்மில் ஒருத்தியாய் இருக்கின்றாள். இந்த முழு உலகையும் இயக்குவது தாய்ப்பாலும் சூரிய ஒளியுமே என பிரபல எழுத்தாளர் மாக்ஸிம் கோர்க்கி கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனின் வெற்றிக்கு பின்னாலும் ஒரு பெண் இருப்பதாக ஒரு கருத்துண்டு. இன்ப துன்பங்களை சமமாக பகிர்ந்துக்கொள்ள சகோதரியை விட மேலானவர் யார் ? நட்பின் பெருமதியை மதிப்பிட முடியுமா? நம் வாழ்வின் பயனை அர்த்தமாக்கி, அடுத்த சந்ததியை தொடர்பவள் ஒரு மகள் அல்லவா? தரணியாய், சுமைதாங்கியாய், வானமாய் இருக்கும் அவள்**

**தாரணி.**





# பிரதான நோக்கம்;

இலங்கை வாழ் பெண்களின் மேம்பாட்டிற்காக யதார்த்தமானதும்

நடைமுறை

சாத்தியமானதுமான

வழிமுறையொன்றினை கையாள,

ஐக்கிய நாடுகளின் பெண்கள்,

சமாதானம், மற்றும் பாதுகாப்பிற்கான

1325 ம் பிரேரணையை

அடிப்படையாகக் கொண்டு சமூகத்தில் பலதரப்பட்ட

மட்டங்களிலுள்ளவர்களின்

அறிவு மற்றும்

புரிந்துணர்வினை அதிகரிக்கச் செய்ய

பயன்படுத்தும்

பயிற்சி கைநூலாகும்!

**பயிற்சியாளர்களுக்கான ஆலோசனைகள்**

பெண்கள், சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி எனும் தொனிப்பொருளின் கீழ் செயல்திட்டங்கள் நடைமுறைப்படுத்த முன்வரும் அனைவரும் முதலில் இந்த கைநூலை முழுமையாக வாசித்து புரிந்துக்கொள்ள வேண்டும். அதோடு இவ்விடயம் தொடர்பாக உள்ள ஏனைய கைநூல்கலையும் படித்து இது பற்றிய அறிவை மேம்பாடு செய்வதன் மூலம் பயிற்சிகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த உதவியாக இருக்கும்.

**பயிற்சியாளர்களை தெரிவு செய்தல்**

பயிற்சியாளர்களை தெரிவு செய்யுமுன் அந்தந்த பிரதேசங்களில் இருக்கும் பிரதிநிதிகளுடன் அடிப்படை கலந்துரையாடல்களை நடத்தவும். இதன்போது விடயங்களை சரியாக புரிந்துக்கொண்டு திறமையான ஒரு நிகழ்ச்சியை தயாரிக்கக் கூடியவர்களை தெரிவு செய்ய கவனத்தில் கொள்ளுங்கள். ஒரு செயலமர்விற்காக 25 முதல் 35 வரையிலான எண்ணிக்கையானவர்களை முன்கூட்டியே தெரிவு செய்ய வேண்டும்.

**பயிற்சிக்கு தயாராகுதல்.**

- ஒரு நாள் பயிற்சியாக இருக்கின்றபடியாள் அதற்கு உகந்த சூழலுடன் தேவையான வசதிகளை கொண்ட இடமாக தெரிவு செய்ய வேண்டும். தேவைக்கேற்ப தங்குமிட வசதிகளையும் கவனத்தில் கொள்ளவும்.
- பயிற்சிக்கு தேவையான கையேடுகள், நேர அட்டவணை, பயிற்சிக்கு தேவையான தஸ்தாவேஜிகளை முற்கூட்டியே தயார்படுத்திக்கொள்ளவும்.
- வேலைத்திட்டத்திற்கான செலவு விபரங்களை முன் கூட்டியே திட்டமிடுவதனால் வேலைத்திட்ட நேரத்தில் ஏற்படும் சங்கடங்களை தவிர்க்கலாம். (இணைப்பு 01)
- பயிற்சியின் அமர்வுகள் ஒன்றுடன் ஒன்று ஒழுங்காக பொருந்துவதற்காக பயிற்சி வழியை திட்டமிடுவது அவசியமாகும். அப்போது ஒவ்வொரு அமர்வுடனும் சிறந்த தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.
  (மாதிரி திட்டம்: அமர்வுகளின் ஒழுங்கு மற்றும் உள்ளடக்கம் இணைப்பு இல 02)

- தலைப்பிற்கு தொடர்புடைய விடயங்களை மட்டும் கலந்துரையாட கவனத்தில் கொள்ளவும். இதில் முன் தயார் நிலை மிக முக்கியமாகும்.

**பயிற்சி முறைகள்**

பங்கேற்பு முறைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த செயலமர்வினை நடைமுறைப்படுத்த வேண்டும். பங்குபற்றுனர்களை உற்சாக மூட்டவும், கலந்துரையாடல்கள், பயிற்சிகள்

சமர்பித்தல்கள் போன்றவற்றை பங்குபற்றுனர்களின் கூடிய பங்கேற்புடன் நமைடுறைப்படுத்த பயிற்சி குழு கவனத்தில் கொள்ளவேண்டும்.

**ஒலி - ஒளியூடகங்களை பயன்படுத்துதல்**

செயலமர்விற்கு தேவையான வரைபுகள், வரைப்படங்கள் ஆகியன முற்கூட்டியே தயார் செய்ய வேண்டும்.

**பயிற்சியின் பின் செய்ய வேண்டியவை**

- பயிற்சியின் பின் வேலைத்தமிட்டமொன்றை அறிமுகப்படுத்த வேண்டும். பயிற்சி செயலமர்வு அந்தந்த பிரதேசங்களுக்கு எந்த அளவிற்கு பொருத்தமாக இருந்ததென்பதை கலந்துரையாட வேண்டும்
- ஒவ்வொரு அபிவிருத்தி - திட்டங்களையும் தனித்தனியே கோவைகளாக தயாரித்து மீளாய்வு நிலைகளை குறிப்பிடுங்கள்





# 1ம் அமர்வு

**அன்றைய நோக்கம் மற்றும் பிரவேசம்**

**செயலமர்வின் நோக்கம்.**

நேரம்: 45 நிமிடங்கள்
இச்செயலமர்வு மூலம் நாம் எதிர்பார்க்கும் பெண்களின் பூரண பங்கேற்பு ஊடாக இலங்கை அபிவிருத்தியை மேம்பாடு செய்தல் தொடர்பாக பங்கபற்றுனர்களுக்கு தெளிவூட்டுங்கள்.

ஒரு செயற்பாட்டின் ஊடாக அறிமுகம் செய்ய தேவையான பொருட்களை தயார் செய்துக்கொள்ளுங்கள்.

**பயிற்சி முறை** :
குழு செயற்பாடு பயிற்சி

**பயிற்சி வழி காட்டல்**

பங்குபற்றுனர்களுக்கிடையே உள்ள கூச்ச சுபாவத்தை நீக்கி பேச்சுத் திறனை மேம்பாடு செய்ய தன்னைத்தானே அறிமுகம் செய்யும் செயற்பாடொன்றை செய்யுங்கள்.

**உதாரணம்:**

**அறிமுகம் செய்துக்கொள்ளல்**

* முற்கூட்டியே எழுதிவைத்த ஆண் பெண் பெயர்களை தனித்தனியே பாத்திரங்களுக்குள் இட்டு பங்குபற்றுனர்களிடம் கொடுங்கள்.
* தனக்கு கிடைத்த பெயருக்குரிய நபரை தேடி அவரின் விபரங்களை பரிமாறிக்கொள்ளுங்கள். அதில் , வதிவிடம், திருமண விபரம், கல்வி தகமை, கள வேலைகள் தொடர்பான அனுபவங்கள், பற்றிய விபரங்களை பரிமாறிக்கொள்ளவும்.
* தான் அறிமுகம் செய்துக்கொண்ட நபரைப்பற்றி ஜோடிகளாக முன் வந்து சபைக்கு அறிமுகம் செய்ய வேண்டும். தனது பெயரை கூறும் போது வெட்டி தயார் செய்துள்ள பெயரை உரிய நபருக்கு சூட்டவும்.

<u>**நோக்கம்.**</u>

* பயிற்சியில் கலந்துக்கொண்டதன் நோக்கத்தை இனங்காண வேண்டும். ணுழுழி ஊயசன ஒன்றையும் பேனாவையும் பங்குபற்றுனரிடம் கொடுங்கள். தான் பயிற்சியில் கலந்துக்கொண்டதன் நோக்கத்தை எழுதச் சொல்லுங்கள். அதற்காக 5 நிமிடங்கள் வழங்கி பின்பு தெரியும் விதத்தில் சுவரில் ஒட்டவும்.
* பயிற்சி முடிவில் இந்த நோக்கம் நிறை வேறியுள்ளதா என வினவ வேண்டும்.
* அடுத்து பயிற்சி வேலைத்திட்டத்தின் நோக்கம் எழுதப்பட்ட அட்டையை தெளிவுப்படுத்த வேண்டும்.
* இந்த வேலைத்திட்டத்தின் வழிமுறை மற்றும் பங்கேற்றல் முறை செயற்படும் விதம் பற்றி விபரியுங்கள்.





# 2 ம் அமர்வு

## அன்றும் இன்றும் இலங்கை பெண்கள்

**அமர்வின் நோக்கம்** :
பங்குபற்றுனர்களில் பெண்களின் கடந்தகால மற்றும் நிகழ்கால நிலைமைகள் தொடர்பாக பொருளாதார, சமூக, அரசியல் மற்றும் கலாச்சார பிரிவு ஊடாக தெளிவுப்படுத்தி எண்ணக்கருவை அபிவிருத்தி செய்தல்.

**நேரம்** : 1 மணி 15 நிமிடம்.

**பயிற்சி உபகரணம்** : வயிட் போட் மார்க்கர், ப்லிப்சார்ட், கத்திரி, புல்டோ க்ளிப்ஸ்

**பயிற்சி முறை** : குழுப்பயிற்சி, கலந்துரையாடல் , விரிவுரை, கேள்வி எழுப்புதல்

**பயிற்சிக்கு வழிக்காட்டல்.**

பயிற்சி தலைப்பு தொடர்பாக சிறு விளக்கம் அளித்தல். அதில் இலங்கை பெண்கள் தொடர்பாக கடந்தகால மற்றும் நிகழ்கால நிலைமைகள் உள்வாங்கப்படல் வேண்டும்.
குவேணி முதல் இன்றைய கால பெண்களை வரை முகம் கொடுத்துள்ள சவால்கள் மற்றும் வென்றெடுத்த வெற்றிகள், அரசியலில் சாதித்த பெண்கள், தீர்மானம் எடுக்கும் மட்டங்களிலுள்ள பெண்கள் போன்ற விபரங்கள் அடங்கிய அறிக்கைகளை காட்டலாம்.

விளக்கமளித்தலின் பின்னர் பங்குபற்றுனர்களை நான்கு குழுக்களாக பிரித்தல்.(இனைப்பு -3)

நான்கு குழுக்களுக்கும் கீழ்காணும் தலைப்புகளை பகிர்ந்தளியுங்கள்.

- அரசியலில் அன்றும்,இன்றும் இலங்கைப் பெண்கள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுத்த சவால்களும்
- பொருளாதாரத்தில் அன்றும்,இன்றும் இலங்கை பெண்கள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுத்த சவால்களும்
- சமூகத்தில் அன்றும், இன்றும் இலங்கை பெண்கள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுத்த சவால்களும்
- கலாசார ரிதியில் அன்றும், இன்றும் இலங்கை பெண்கள் அடைந்த வெற்றிகளும் முகம் கொடுத்த சவால்களும்

இந்த 04 தலைப்புகளையும் முற்கூட்டியே சிறிய அட்டைகளில் எழுதி வைத்துக்கொள்ளலாம்.

ப்ளிப் சார்ட் மற்றும் மார்க்கர் பேனை 04 குழுக்களுக்கும் தேவைக்கேற்ப பெற்றுக்கொடுக்கவும்.

குழு வேலைக்காக 10 நிமிடம் பெற்றுக்கொடுக்கவும்.

04 குழுவுக்கும் 05 நிமிடம் விகிதம் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்கவும்.





சிறந்த சமர்ப்பணத்திற்கு சிறிய பரிசு ஒன்றை வழங்கவும்.

சமர்ப்பணத்தின் பின்னர் பயிற்சியாளர் கீழ்வரும் கருத்துக்களுடன் நோக்கத்தை அடைவதற்கு கலந்துரையாடல் மூலம் வழிக்காட்டல்.

- பெண்கள் தொடர்பான மத ரீதியான, வரலாற்று ரீதியான, கலாச்சார ரீதியான நிலமைகள்.
- உலகப் புகழ்ப்பெற்ற மேதைகள் பெண்களை பற்றி முன்வைத்த கூற்றுகள். (ஒளி ஊடகங்கள் மூலம் அல்லது ப்ளிப் சார்ட் மூலம் முன்வைக்கலாம்.)
- தேசிய மற்றும் சர்வதேச வீர மங்கையர்கள்.
- பெண்களின் முக்கியத்துவத்தை பறைசாற்றும் கிராமிய கதைகள்.
- நாட்டின் பொருளாதாரத்திற்கு பெண்களின் பங்களிப்பின் முக்கியத்துவம்.
- பெண்களின் பங்களிப்பினால் உலகை வெற்றி கொண்ட நாடுகள்.
  உதாரணம் : ஸ்கண்டினேவியா (கூடிய தனிநபர் வருமானம்)
  அரசியல் பிரதிநிதித்துவம் அதிகமுள்ள நாடுகள் ( இந்தியா, பங்களாதேஷ், நேபாலம்)

- கேள்விகளுக்கு இடமளித்து பதில்களை பெற்றுக்கொடுங்கள். உங்கள் நோக்கத்துடன் ஒப்பிட்டு அமர்வை நிறைவு செய்யுங்கள்.
- கையேடு இல 01-1 பெற்றுக்கொடுக்கவும்.

## 3ம் அமர்வு

**வீடு வரை சட்டம்**

**நோக்கம் :**

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பெண்களின் உரிமை மற்றும் பெண்களுக்கு பாதகமாகவும் சாதகமாகவும் அமையும் சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள், இணக்கப்பாடுகள் மற்றும் கொள்கைகள் தொடர்பாக பங்குபற்றுனர்களுக்கு தெளிவூட்டல்.

**நேரம்:** 1மணி 15 நிமிடம்.

**பயிற்சி உபகரணம்** :

வயிட் போட் மார்க்கர்,வயிட்போட், ப்லிப்சார்ட், பெட்டிக்னம்,கத்திரி, புல்டோ க்ளிப்ஸ் பந்து.

**பயிற்சி முறை** :

கலந்துரையாடல், விரிவுரை, சமர்ப்பித்தல், மல்ட்டிமீடியா.

**பயிற்சிக்கான வழிக்காட்டல்:**

- பங்குபற்றுனர்களை வட்ட வடிவமாக அமர்த்தி அறிவுரை வழங்குதல்.
- “பெண்கள் மற்றும் சட்டம்” என்று எழுதப்பட்ட பந்தை பங்குபற்றுனர்களுக்கு காட்சிப்படுத்துங்கள்.
- பந்து கையிற்கு கிடைக்கும் நபரினால் பந்தில் எழுதியுள்ள தலைப்பு தொடர்பாக தான் தெரிந்ததை முன்வைக்க வேண்டும் என்பதை கூறவும்.





- பங்குபற்றுனர்கள் முன்வைக்கும் கருத்துகளை வயிட்போடில் குறித்துக்கொள்வதற்கு ஒருவரை சுயேட்சையாக முன்வருமாறு கூறவும்.
- இந்த செயற்பாட்டிற்கு 10 நிமிடம் போதுமானதாகும்.
- பங்குபற்றுனர்களை அமரச் சொல்லவும்.
- அவர்கள் பட்டியலிட்ட தகவல்கள் எங்களது நோக்கத்திற்கு ஏற்றவகையில் தயார்படுத்திக்கொள்ளல்.
- பயிற்சியாளரால் கீழ்வரும் கருத்தை கவனத்திற் கொண்டு கலந்துரையாடப்படல் வேண்டும்.
- தேசிய மற்றும் பிரதேச ரீதியிலான சட்ட பின்னனி
    - அரசியலமைப்பின் மனித உரிமைகள் பற்றி குறிப்பிட்டுள்ள 12ம் உறுப்புரை
    - பெண்கள் சமவாயம் 2,3,4,5,6 பகுதிகள்
    - 2005 இல 34 -வீட்டு வன்முறைத் தடுப்புச்சட்டம்
    - L.L.R.C அறிக்கையின் 5,112,113,114 பகுதிகள்
    - 2003 பெண்களின் உரிமைகள் சட்டம்
    - மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு பற்றிய தேசிய செயற்திட்டம். இல 05

- **சர்வதேச ரீதியில்**
    - சீடோ இணக்கப்பாடு 1979
    - சீடோ இணக்கப்பாடு மாற்று ஒப்பந்தம் 2002
    - 1995 பீஜிங் பெண்கள் செயற்திட்டம்
    - பெண்கள் கொள்கை அறிக்கை 2007, 2010
    - சீடோ இணக்கப்பாடு தொடர்பான இறுதி அறிக்கை 206,221,222
    - அரசியலமைப்பின் மனித உரிமைகள் பற்றி குறிப்பிட்டுள்ள 12ம் உறுப்புரை
    - பெண்கள், சமாதானம், பாதுகாப்பு பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவையால் முன்வைக்கப்பட்ட 1325 பிரேரணை
    - 1820, 1888, 1889, 1960 மோதல்களை தடுத்தல், தீர்வு காணல், மற்றும் சமாதானத்ததை நிலைநாட்டல் போன்ற விடயங்களுக்கு பெண்களின் பூரண பங்களிப்பை பெற ஏற்பாடு செய்துள்ள சர்வதேச சட்டங்கள்.

**ஐக்கிய நாடுகள் சபை உருவாகியது ஏன்? பாதுகாப்பு பேரவையின் செயற்பாடுகள் என்ன? கலந்துரையாடுங்கள்.**(கையேடு இல 04 -போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம் தயாரித்த கையேட்டை பெற்றுக்கொடுத்தல்)

கற்ற பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவிற்கு பெண்கள் முன் வைத்துள்ள விடயங்களின் முக்கியத்துவம், ஆணைக்குழு பெண்கள் தொடர்பாக முன்வைத்துள்ள சிபாரிசுகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவம், மற்றும் 1993 பெண்கள் சமவாயத்தின் சமத்துவம் மற்றும் உரிமைகள் பற்றிய கட்டமைப்பினுள் கொடுக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் பற்றி கலந்துரையாடுவது மிக முக்கியமாகும்.

அதிகம் விபரிக்காமல் பொதுவாக இவைகளைப்பற்றி கூறவும். முன்னால் மேற்கொண்ட செயற்பாட்டின் பிரதிபலன்களுடன் இதில் காணப்படும் இடைவெளியை சீர்செய்யும் பொருப்பு அடுத்த தலைமைத்துவம் பெறவிருப்போருக்கு உள்ளதென்பதை கூறுங்கள்.

- தேவையான இடத்தில் மட்டும் நாட்டின் தற்போதைய நிலமை பற்றி கலந்துரையாடலாம்
- சுதந்திரம் பெற்று 50 வருடங்களையும் கடந்த நிலையில் இன்னும் ஐ. நாவின் பாதுகாப்புச் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் சந்தர்ப்பம் கிடைக்காமைக்கான காரணங்கள்
- பங்குபற்றுனர்களின் கேள்வி பதில்களுடன் கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள்
- கையேடுகள் இல 2-1 2-2 2-3 2-4 2-5 பெற்றுக்கொடுங்கள்

கையேடுகள்

1. அரசியலமைப்பின் 12ம் உறுப்புரை
2. சீடோ இணக்கப்பாடு 1979
3. பெண்கள் சமவாயம்
4. 2005 இல 34 -வீட்டு வன்முறைத் தடுப்புச்சட்டம்
5. L.L.R.C அறிக்கையின் 5-112,113.114 பகுதிகள்

# 4 ம் அமரரவு

**பெண்கள், சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய இலங்கையின் இன்றைய நடைமுறை**

**அமர்வின் நோக்கம்** :

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையினால் முன்வைக்கப்பட்ட 1325 பிரேரணை, இலங்கையின் இன்றைய நடைமுறை நிலைமையுடன் ஒப்பிட்டு சரளமான கருத்தை முன்வைப்பதன் ஊடாக 1325 பிரேரணை பற்றிய கோட்பாட்டு ரீதியிலான விடயங்கள் தொடர்பாக விளங்கிக்கொள்ள தேவையான சூழலையும் மனப்பாங்கையும் பங்குபற்றுனர்களிடையே ஏற்படுத்துதல்

**நேரம்:** 1மணி 15 நிமிடம்.

**பயிற்சி உபகரணம்** : வயிட்போட் மார்க்கர், வயிட்போட், ப்லிப்சார்ட்,

**பயிற்சி முறை** :

பங்கேற்பு கலந்துரையாடல், சிறு விரிவுரைகள்,

**பயிற்சிக்கான வழிக்காட்டல்:**

பெண்கள், சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பற்றிய இலங்கையின் இன்றைய நடைமுறை நிலைமை பற்றிய விடயங்களை பங்குபற்றினர்களின் கருத்துக்களுடன் சேகரியுங்கள்

- பங்குபற்றுனர்கள் முன்வைக்கும் கருத்துக்களைப் போர்டில் குறித்துக்கொள்ளுங்கள்
- அக்கருத்துக்களை கீழ் காணும் 04 விடயங்களின் அடிப்படையில் தொகுத்து கலந்துரையாடலை நடத்துங்கள்

1. **இலங்கையினுல் மிக முக்கியமான சந்தர்ப்பங்களில் பெண்களின் பங்கேற்பு**
2. **ஏனைய நாடுகளில் மூன்றாம் தரப்பினராக கடமையாற்றும் போதும் பயிற்சிகள் வழங்கும் போதும் பெண்கள் சார்ந்த விடயங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல்**

3. **தாய், சகோதரி, மகள் எனும் வகையில் அன்பு செய்தல், மதிப்பளித்தல்**
4. **விசேட அறிக்கைகள் தயாரித்தலின் போதும் செயற்பாடுகளின் போதும் பெண்களின் கருத்துக்களையும் செவிமடுத்தல்**

அடுத்ததாக பங்குபற்றுனர்களை 04 குழுக்களாக பிரியுங்கள்

- இன்றைய பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை பட்டியல் ஊடாக கூறுங்கள் (நேரம் 10 நிமிடம்)
- நீங்கள் பிரிஸில் போர்டில் எழுதியுள்ள மேற்குறிப்பிட்டுள்ள 04 விடயங்களையும் காட்சி படுத்துங்கள்
- அவர்கள் எழுதிய பிரச்சினைகள் எந்தெந்த பகுதியோடு பொருந்துகிறதோ அதன் பக்கத்தில் சென்று நிற்குமாறு கூறுங்கள்
- அவர்கள் அவ்வாறு நிற்பதற்கான காரணங்களை குழுக்களிடம் விசாரியுங்கள்.
- பங்குபற்றினர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்
- அக்கருத்துக்களுக்கு உங்களது மறுமொழியுடன் கலந்துரையாடலை நிறைவு செய்யுங்கள்

## 5 ம் அமர்வு

**பெண்கள், சமாதானம், பாதுகாப்பு பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையினால் முன்வைக்கப்பட்ட 1325 பிரேரணை**

**அமர்வின் நோக்கம்**:
ஐக்கிய நாடுகள் சபையின் 1325 பிரேரணையை, நம் நாட்டுத் தனித்துவத்துடனும் நடைமுறை சாத்தியத்துடனும் அமுல்படுத்த கூடிய வித்தில் பங்குபற்றுனர்களின் அறிவு ,திறமை ஆற்றல் மற்றும் மனப்பாங்கை மேம்பாடு செய்தல்.

**நேரம்**: 1மணி 45 நிமிடம்.

**பயிற்சி உபகரணம்** : வயிட்போட் மார்க்கர், வயிட்போட், ப்லிப்சார்ட், Zopp card” கையேடுகள்

**பயிற்சி முறை** :
கலந்துரையாடல்,சிறு விரிவுரைகள், குழுச் செயற்பாடு

**பயிற்சிக்கான வழிக்காட்டல்:**

- ஐக்கிய நாடுகள் சபை, அதன் பாதுகாப்பு பேரவை , அதன் நோக்கங்கள் எதிர்பார்ப்புகள் மற்றும் சேவைகள் பற்றிய முன் கூறிய சிறு விளக்கத்தை நினைவு கூறுங்கள்
- இது பற்றிய முதலாவது எண்ணக்கரு மேற்கத்திய கொள்கையுள்ள, ஆசிய நாடுகளிலிருந்து உருவானதை விளக்குங்கள். சர்வதேச உதாரணங்களை எடுத்துரையுங்கள். ஆயுத போர் நடக்கும் உலகில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் விசேடமாக பெண்களின் பாதுகாப்பு பற்றிய அச்சுருத்தல்கள் ஏற்படுகின்றமையும் சில நாடுகளில் பெண்களை போர் ஆயதமாகக் கொண்டு கடும் சித்திரவதைகளுக்குட்படுத்துவதையும் குறிப்பிடலாம்.

- இதன் காரணமாக பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுததல் மற்றும் போர் நிறுத்தச் செயற்பாடுகளின் போது பெண்களின் விசேட திறமைகளை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்களையும் சர்வதேச உதாரணங்கள் மூலம் விளக்குங்கள்.





- தேசிய ரீதியில் இலங்கை சமாதான செயற்பாட்டில் பெண்களின் விசேட பங்கேற்றலை குறிப்பிடுங்கள். .உதாரணம் :Gender subcommittee.
- **1325 ன் பிரதான உள்ளடக்கங்கள் 04 ஆகும்.**
  - **தீர்மானம் எடுப்பதில் மற்றும் சமாதான செயற்பாட்டில் பெண்களின் பங்கேற்பு**
  - **அமைதிப்படைகளை பயிற்றுவித்தல் மற்றும் பெண்களின் தேவைகள் பற்றி அதிக கவனமெடுத்தல்**
  - **பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல்.**
  - **ஐ. நா வின் அறிக்கையை சமர்பித்தல் மற்றும் அமுல்படுத்தும் செயற்பாடுகளில் பெண்களின் தேவைகளை பற்றி கவனத்திற்கொள்ளல்.**

இவைகளின் நோக்கங்களை வழியுறுத்திய வன்னம் கலந்தரையாடலை மேற்கொள்ளுங்கள்.

- பங்குபற்றுனர்களை நான்கு குழுக்களாக பிரியுங்கள்
  - ➢ பங்கேற்றல்
  - ➢ தடுத்தல்
  - ➢ பாதுகாத்தல்
  - ➢ மீளக்கட்டியெழுப்பல்

1325 இலங்கை சமூகத்தினுள் எந்தளவிற்கு நடைமுறை சாத்தியம் என்பதை குறிப்பிடுவதற்கு 04 குழுக்களுக்கு தனித்தனியே தலைப்புகளை வழங்குங்கள்.

- 15 நிமிடம் பெற்றுக்கொடுங்கள்.
- ஒரு குழு சமர்பணத்திற்காக 3 நிமிடங்கள் வழங்குங்கள்
- 2ம் அமர்வில் அந்த தலைப்பிற்காக குழுக்கள் முன்வைத்த விடயங்களுடன் இவ்வமர்வின் முன்வைத்த விடயங்களை ஒப்பிட்டவாறு பகுப்பாய்வு செய்யுங்கள்.
- இதன் போது கீழ் காணும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாட வேண்டும்.

  - அரசியலமைப்பின் 12 (4) உடன் 1325 ஒப்பிடுதல்
  - இலங்கையில் 1325 பிரேரணையை சட்டமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை
  - அந்தந்த பிரதேசத்திற்கேற்ப போருக்கு பின்னால் உள்ள சூழ்நிலையோடு 1325 ஒப்பிடுதல்
  - 1325ன் நன்மைகள் யாவும் சமூகத்திற்கே உள்ளதென்பதை வழியுறுத்தி அவர்களை அதற்காக ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை எடுத்து கூறல்

- பங்குபற்றுனர்களின் கேள்வி பதில்களை கலந்துரையாடியபடி முழு செயலமர்வின் விடயங்களையும் உங்கள் நோக்கத்துடன் சாராம்சப்படுத்துங்கள்.

**“பேதுரு முனையிலிருநத்து தேவேந்திர முனை வரை சர்வ ஆபரணங்களையும் அனிந்த பெண் தனியே செலலல்”** எனும் நிலமையை 1325ன் பெண்கள், சமாதானம் பாதுகாப்புடன் ஒப்பிட்டு, அவ்வாறான ஒரு சௌபாக்கிமான ஒரு எதிர்காலத்தை நோக்கிச் செல்லவே இந்த முயற்சி என்பதை வழியுறுத்துங்கள்.

இவையனைத்தும் 1325ன் உள்ளடக்கத்தில் இருப்பதை பங்குபற்றுனர்களுக்கு உணர்த்துங்கள்

அடுத்ததாக கையேடுகளை பகிர்ந்தளியுங்கள்.

5-1 1325 பிரேரணை மற்றும் வழிகாட்டல்





**மீளாய்வும் நிறைவும்**

**எழுத்து மூல மீளாய்வு**

**வாய் மூல மீளாய்வு ( பதிவு செய்யுக்கொள்ளுங்கள்)**

**நன்றியுறை**

**நிகழ்சி நிறைவு**

## பயிற்சியாளருகளுக்கு வாசிக்கக்கூடிய சில குறிப்புக்கள்

1. சமாதானம், பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திற்ாகன இலங்கை பெண்களின் நிகழ்ச்சித்திட்டம் (போரினால் பாதிக்கப்பட்ட பெண்களின் சங்கம்)

2. பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு பற்றிய இந்நாட்டு மற்றும் சர்வதே அறிக்கைகள், கடிதங்கள்

**இனைப்பு 01**

| விபரம் | அளவு | நாட்கள் | ஒரு அலகின் பெருமதி | மொத்தம் |
|---|---|---|---|---|
| **போக்குவரத்துச் செலவு**<br>ஏற்பாட்டாளர்<br>வளப்பகிர்வாளர்<br>பங்குபற்றுனர்கள்<br>தேநீர்-காலை மாலை<br>தங்குமிடம் உணவு<br>மண்டப கட்டணம்<br>தொடர்புசாதன கட்டணம்<br>கடித பொருட்கள்<br>இணைப்பாளர் கொடுப்பணவு<br>வளப்பகிர்வாளர் கொடுப்பணவு<br>மொழிபெயர்ப்பாளர் கட்டணம்<br>அறிக்கை சமர்ப்பித்தல்<br>உதவியாளர் கொடுப்பணவு | x<br>x<br>xx<br>xx<br>xx<br>x<br>x<br>x<br>xx<br>x<br>xx<br>x<br>x | x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x<br>x | xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx | xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx<br>xxxx |
| **மொத்தம்** | **xx** | **x** | xxxx | xxxx |





02

## ஒரு நாள் நிகழ்ச்சித்திட்ட மாதிரி வடிவம்

| | |
|---|---|
| மு.ப : 9.00 | ஆரம்பம் மற்றும் வரவேற்பு |
| மு.ப : 9.00 -- மு.ப : 9.30 | நோக்கத்தை தெளிவுப்படுத்தலும் அறிமுகமும். |
| மு.ப : 9.30 -- மு.ப : 10.45 | **முதலாம் அமர்வு**<br>• அன்றும் இன்றும் இலங்கை பெண்கள் |
| மு.ப : 10.45 -- மு.ப :11.00 | தேநீர் இடைவேளை |
| மு.ப : 11.00 -- மு.ப : 12.15 | **இரண்டாம் அமர்வு** |
| மு.ப : 12.15 -- மு.ப : 1.30 | **மூன்றாவது அமர்வு**<br>• தாரணி |
| மு.ப : 1.30 -- மு.ப : 2.15 | மதிய உணவு |
| மு.ப : 2.15 -- மு.ப : 3.30 | **நான்காவது அமர்வு**<br>• ஐக்கிய நாடுகள் சபையின் 1325 ம் பிரேரனை |
| மு.ப : 3.30 -- மு.ப : 3.45 | தேநீர் இடைவேளை |
| மு.ப : 3.45 -- மு.ப : 4.15 | **நான்காவது அமர்வின் தொடர்ச்சி** |
| மு.ப : 4.15 -- மு.ப : 4.30 | மீளாய்வு மற்றும் நிறைவு |

1. 1325 கையேடுகளை தேவையான அளவு பெற்றுக்கொடுங்கள்

2. **ஐக்கிய நாடுகள் சபையின் 1325 பெணகள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கையேடு.**

இந்தக் கையேடு 2000ம் ஆண்டு டிசம்பர் மாதம் இன்டர்நெ'னல் அல்ர்ட் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட ஆவணத்திலிருந்து கிடைக்கப்பெற்று போரினால் பாதிப்புக்குள்ளான பெண்கள் ஒன்றியத்தினால் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

ஐ.நா. சபையின் பெண்கள் சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான 1325 யோசனை 2000ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. மேலோட்டமான பார்வையில் இது நடைமுறைச்சாத்தியமான அல்லது சாத்தியமற்ற ஒன்றாக மட்டுமே தெரியலாம். ஆனால் உலகம் முழுவதும் போர் சூழல்களில் வாழும் அவதியுறும் பெண்களைப் பொருத்தவரையில் ஒரு வரலாற்று ஆவணமாகும். உறுதியாகவே இவ்யோசனை சர்வதேச ரீதியான ஒரு பலத்தைப் பெற்றிருக்கிறது. இது எதிர்காலத்தில் இன்னும் வலுப்பெறும் அதேவேளை தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தவும் முடியும்.

ஐ.நா.வின் பாதுகாப்புச் சபையூடாக யுத்த சூழல் உள்ள பிரதேசங்களில் வாழும் பெண்களின் பாதுகாப்பை அதிகரிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் இவ்ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. உலக வரலாற்றில் முதற்தடவையாக சமாதான





செயன்முறையிலும் அதனோடு தொடர்புடைய சகல நடவடிக்கைகளிலும் முடிவுகளை எட்டும் போதும் ஐ.நா.வின் பொறிமுறை உட்பட சகல மட்டங்களிலும் முடிவுவெடுக்கும் சந்தர்ப்பங்களிலும் பெண்களை பங்குபற்றச் செய்வதற்கான சட்டபூர்வமான விருப்பம் தெரிவிக்கப்பட்டிருப்பது மிக முக்கியமான அம்சமாகும். இதனூடாக ஐ.நா.வின் உள்ளே சாதகமான மாற்றங்களைக் காட்டுகிறது.

இந்த 1325 யோசனையின் மூலம் ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை அதன் செயலாளர் நாயகத்துக்கும் அங்கத்துவ நாடுகளுக்கும் மற்றும் ஏனைய அனைத்துத் தரப்பினருக்கும் ஒன்றோடொன்று தொடர்புபட்ட நான்கு விடயங்களை ஆவண செய்துள்ளது. (அரச சார்பற்ற ஆர்வலர்கள், ஆயதக்குழுக்கள், இராணுவம், மனிதநேய அமைப்புகள், சிவில் சமூகம்)

1. சமாதான செயன்முறையிலும் அதோடு தொடர்புடைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரச மட்டத்திலும் குறிப்பாக முடிவெடுக்கும் மட்டங்களிலும் பெண்களின் பங்குபற்றலை உறுதி செய்தல்.
2. சமாதான படைகளை பயிற்றுவிக்கும் போது பெண்களின் விஷேட தேவைகள் தொடர்பான விடயங்களுக்கு மதிப்பளித்தல்.
3. பெண்களை பாதுகாத்தல்.
4. ஐ.நா.சபையின் அறிக்கை சமர்ப்பித்தல் மற்றும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தும் வியூகங்களில் பெண்களின் பங்குபற்றலை உறுதி செய்தல்.

## 1. முடிவெடுத்தலில் மற்றும் சமாதான செயற்பாடுகளில் பெண்களின் பங்குபற்றல்.

இந்தத் தலைப்பு இரண்டு பகுதிகளை உள்ளடக்கும். முதலாவது நிறுவனங்களில் மற்றும் கள நடவடிக்கைகளில் பெண்களின் பங்குபற்றுதலை அதிகரித்தல். இரண்டாவது யதார்த்தமான சமாதான செயன்முறைகளில் பெண்கள் குழுக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதலும் பெண்களை உள்வாங்க செய்வதுமாகும்.

### (அ) விமர்சனமிக்க சமூகமொன்றை கட்டியெழுப்புதல்.

இவ்யோசனை சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் தொடர்பாக முடிவெடுக்கும் பதவிகளில் பெண்களின் அங்கத்துவத்தை அதிகரிப்பது தொடர்பான ஒருமித்த உடன்பாட்டுக்கு வருவதாகும். முரன்பாட்டு தவிர்ப்பு, முகாமைத்துவம், தீர்வு காணல் போன்றவைகள் தொடர்பாக முடிவெடுக்கும் சகல மட்டங்களிலும் (தேசிய, பிராந்திய, சர்வதேச) பெண்கள் அங்கத்துவத்தை அதிகரிப்பதற்கு ஐ.நா.வின் பாதுகாப்புச்சபை அங்கத்துவ நாடுகளிடம் மிகவும் ஆர்வத்தோடு வேண்டிக்கொள்கிறது. மேலும் ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதிலும் பொருத்தமான அபேட்சகர்களை ஐ.நா.செயலாளருக்கு சமர்ப்பிக்குமாறும் மேலும் கேட்டுக்கொள்கிறது. இதற்கு இணையாக ஐ.நா.வின் பொறிமுறையின் உள்ளே தீர்மானம் மேற்கொள்ளும் மட்டங்களில் உள்ள பெண்களின் அங்கத்துவத்தை அதிகரிப்பதோடு நின்றுவிடாமல் மேல்மட்ட பதவிகளுக்காக பெண்கள் நியமிக்கப்படுவதையும் வலியுறுத்துகிறது. இதன் போது விஷேட தூதுவர்கள் மற்றும் பிரதிநிதிகள் களமட்ட செயற்பாடுகளில் விஷேடமாக இராணுவ அவதானிப்பாளர்களிடையே பொதுமக்கள், பொலிஸ் மற்றும் மனித உரிமை ஆர்வலர்களை உறுதிப்படுத்தல். இறுதியாக பாதுகாப்புச்சபை அனைத்து களமட்ட செயற்பாடுகளிலும் பெண்களின் தேவைகளை உணர்வுபூர்வமாக உணரக்கூடிய ஒரு தூரநோக்குடனான போக்கு கையாளப்படுவது அவசியம் எனக் கருதுகிறது.

### இதிலுள்ள தாக்கம்?

இதுவரை காலமும் ஆணாதிக்கத்தின் கீழ் இருந்த முக்கிய பதவிகளுக்கு தகுதியுடைய பெண்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கலாம். ஆனால் பெண்களுக்கான உயர் பதவி தொடர்பாக குறிப்பான வெற்றிடங்கள் வேறுபடுத்தப்படாமல் இருக்கிறது. இது தொடர்பான காலஅட்டவணைஇ ஆராயும் முறைகள் இல்லாமையும் எமது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும். களத் திட்டங்களில்

பெண்களின் பங்குபற்றுதலை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லை. உரிய தரப்பினர் கட்டாய நடவடிக்கைகளில் ஈடுபடாது விடும் வாய்ப்புகள் அதிகம். மேற்படி விடயங்கள் தொடர்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள்இ அரசாங்கங்கள்இ ஐ.நா.நிறுவனங்கள் என்பன உரிய கண்காணிப்பு மீளாய்வு செயன்முறைகளை உருவாக்க வேண்டும்.

**எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

- ஐ.நா மற்றும் அரசாங்கங்களினால் முறைப்படி நடைமுறைப்படுத்துவதை அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்காணிக்க வேண்டும்.
- அரசாங்கங்களினால் ஐ.நா.வின் உயர் பதவிகளுக்கு தகுதிவாய்ந்த பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகித்தல்.
- அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை பங்குதாரர்களாகக் கருதி அவர்களை வேலைகளுக்கான பட்டியலில் இணைத்துக்கொள்ளல்.

**(ஆ) சமாதான செயன்முறைகளின் (ீநயஉந ிசழஉநளள) போது பெண்கள் குழுக்களின் கருத்துக்களை கேட்டறிதலும் அவர்களை உள்வாங்களும்.**

தேசிய சர்வதேச பெண்கள் குழுக்களின் ஆலோசனைகளை தமது தூதுவராலயங்களால் பெற்றுக்கொள்ளப்படும் என சபை உறுதியளித்துள்ளது. கிராம மட்டப் பெண்களின் சமாதான செயன்முறைகளுக்கு ஆதரவான செயற்பாடுகள் மற்றும் அந்தந்த நாடுகளுக்குப் பொருத்தமான முரண்பாட்டுத் தீர்வு செயன்முறைகளுக்கும் முரண்பாட்டு முடிவுகளின் போது புனர் நிர்மானம், மீள்சமரசம், புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் நட்டஈடு வழங்கப்படுவதிலும் பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் இருக்கும் குறிப்பான தேவைகளுக்கு கவனம் செலுத்தி அவை உள்ளடங்கும் பெண்கள் தொடர்பான விடயதானம் ஒன்றை சமாதான செயன்முறையிலும் பேச்சுவார்த்தைகளிலும் நடைமுறைப்படுத்துமாறு அனைத்துத் தரப்பினரிடமும் (அரச, சர்வதேச, அரச சார்பற்ற) வேண்டி நிற்கிறது

**இதிலுள்ள தாக்கம்?**

சமாதான செயன்முறைகளின் போது குறிப்பாக சமாதான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் போது பெண்கள் குழுக்கள் மற்றும் சிவில் சமூக ஆர்வலர்களின் பங்குபற்றுதல் இதன் மூலமாக உறுதிப்படுத்தல் மிகச் சிறப்பான செயற்பாடாகும். இதன் மூலம் மக்கள் பங்குபற்றுதலுக்கும் சம்பிரதாயபூர்வமான அரச சார்பற்ற செயற்பாடுகளுக்கு புதிய வழிகள் திறக்கப்படும்.

**எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள்**

- முரண்பாட்டுப் பிரதேசங்களில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் தேசிய மற்றும் சர்வதேச சமாதான பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றுபவர்கள் இந்த யோசனைகளை பாவனைக்கு எடுப்பதன் மூலம் சமாதான செயன்முறைகளில் அதிக பங்குபற்றுதலை ஊக்குவிப்பதற்கான சந்தர்ப்பத்தைக் கோர முடிவதோடு அதனை செயற்படுத்த வேண்டும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் சமாதான செயன்முறைகளில் தொடர்புபட்டிருப்பவர்களின் செயற்பாடுகள் கண்காணிப்புக்கும் மீளாய்வுக்கும் உட்படுதல் அவசியம்.
- அரசுகள், சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஐ.நா நிறுவனங்கள் முரண்பாட்டுத் தீர்வு, தவிர்த்தல் மற்றும் முகாமைத்துவம் போன்ற சகல மட்டங்களிலும் சிவில் சமூகத்தை பங்குபற்றச் செய்தலும் அவர்களின் ஆலோசனைகளை பெறலும் தொடர்ச்சியாக நடைபெற வேண்டும்.

2. **அமைதி காக்கும் படைகளை பயிற்றுவித்தலும் மற்றும் பெண்களின் தேவைகளுக்கு உணர்வுபூர்வமாக மதிப்பளித்தலும்.**

- அமைதி காக்கும் படைகளில் பெண்களையும், பெண்களின் தேவைகள் தொடர்பான விடயங்களையும் இணைத்துக்கொள்வது தொடர்பான துண்டுப்பிரசுரங்கள், வழிகாட்டல்கள், அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பப்படவேண்டுமென பாதுகாப்புச்சபை செயலாளர் நாயகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளது. அதே போன்று ஐ.நா.வில் அமைதி காக்கும் பணியோடு தொடர்புடைய சிவில் அதிகாரிகளையும் இவ்விடயங்களில் பயிற்றுவித்தல். பணிகளுக்கு செல்லத் தயாராகும் இராணுவ பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்விடயங்கள் மற்றும் எச்.ஐ.வி வைரஸ் தொடர்பாக அறிவூட்டல். மேலும் ஐ.நா. தனது வரவு செலவுப் பட்டியலில் மேற்படி விடயங்களுக்கு கூடுதல் ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளல்.

**இதிலுள்ள தாக்கங்கள்?**

இது அமைதி பேணுபவர்களிடமும் அதில் ஆர்வமான சிவில் சமூகத்தாரிடமும் பெண்களின் தேவைகளுக்கு மதிப்பளிக்குமாறு முன்வைக்கும் தெளிவான வெளிப்படையான வேண்டுகோளாகும்.

ஆனால் அரசாங்கங்களினால் போதிய நிதி ஒதுக்கீடுகள் இன்மையால் இவை செயற்படுத்தப்படாமல் போகின்றன.

**மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்**

- அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் அரசாங்கங்களிடம் இது தொடர்பான போதிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுமாறு வழியுறுத்தல்.
- அமைதி காக்கும் பணிகளுக்கு படைகளை அனுப்பும் நாடுகளில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் அவர்களின் பயிற்சிகளில் பெண்களின் குறிப்பான தேவைகளுக்கு மதிப்பளிக்கும் விடயங்கள் உள்ளடக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கலாம்.
- பொருத்தமான தேசிய சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களை மேற்படி பயிற்சிகளின் போது இணைத்துக்கொள்ளுமாறு உரிய அரசாங்கங்களை ஐ.நா. கேட்டுக்கொள்ளலாம்.
- அமைதி காக்கும் படைகள் செயற்படுகின்ற முரண்பாட்டுச் சூழலில் வாழ்கின்ற பெண்கள், பெண் பிள்ளைகள் தொடர்பில் அவர்களின் செயற்பாடுகள் பற்றி அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- ஐ.நா.வின் நிறுவனங்கள் (ருரேஊசுஇ ஐ.நா.வின் பெண்கள் தொடர்பான பிரிவு, ஐ.நா.வின் பெண்கள் வேலைத் திட்டங்கள் அமைதி காத்தல் தொடர்பான பிரிவு மனித நேய தொடர்பகம்) தேசிய சர்வதேச பெண்கள் தொடர்பான அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் நடைபெறும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்பும் ஆலோசனைகளும் வழங்கப்பட வேண்டும்.

3. **பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மற்றும் சமாதான செயன்முறைகளோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினரிடமும் சபை கேட்டுக்கொள்வது பெண்களினதும் பெண் பிள்ளைகளினதும் மனிதாபிமான உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு அவற்றுக்கு மதிப்பளிக்கப்பட வேண்டும். விசேடமாக அரசியல் யாப்பு, தேர்தல் செயன்முறை, பொலீஸ் மற்றும் நீதித்துறை போன்றவற்றிடம் மேலும் வேண்டிக்கொள்வது ஆயுதங்களை கைவிடுவது, களைந்து செல்லல், சொந்த இடத்திற்கு திருப்பியனுப்புதல் ஆகிய செயற்பாடுகளில் சேவை முதிர்ந்த ஆண்,பெண் படையினரின் ஒன்றோடொன்று வித்தியாசமான தேவைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அதே போன்று சிவில் சமூகம் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் மற்றும் மனித நேய விசேத்துவம் கவனத்தில் கொள்ளப்பட்டு பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் முரண்பாட்டுச் சந்தர்ப்பங்களில் வன்முறை செயற்பாடுகள் குறிப்பாக வல்லுறவு போன்ற செயற்பாடுகளில் இருந்து பாதுகாக்க வேண்டும்.





சகல தரப்பினரிடமும் (அங்கத்துவ நாடுகள், போராட்டக் குழுக்கள், ஐ.நா. மற்றும் மனிதநேய அமைப்புகள் உட்பட) வேண்டிக்கொள்வது அவர்கள் அகதி முகாம்கள் மற்றும் குடியிருப்புகளின் மக்கள் சூழலுக்கு மதிப்பளிக்க வேண்டும். அதனிடையே பெண்கள் பெண் பிள்ளைகளின் குறித்த தேவைகள் கருத்தில் கொள்ளப்பட்டு அகதி முகாம்கள் திட்டமிடல், நிர்மாணம் போன்றவற்றின் முகாமைத்துவத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உட்பட சகல வன்முறைகளும் யுத்தம் மற்றும் மனிதத் தன்மைக்கு எதிரான பிழை செய்பவர்கள் மற்றும் இனச்சுத்திகரிப்பு போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு பொது மன்னிப்பு மறுக்கப்பட்டு சட்டத்தின் முன் கொண்டுவருமாறு அங்கத்துவ நாடுகளிடம் விசேடமாகக் கேட்டுக்கொள்கிறது.

**இதிலுள்ள தாக்கங்கள்.**

பெண்களின் உரிமை மீறல்கள் தொடர்பாக முறண்பாட்டோடு தொடர்புடைய சகல அரசுகள் மற்றும் அரச சார்பற்ற தரப்பினர் பொறுப்புச் சுமக்க வழிசமைக்கிறது. அதே போன்று பெண்களை பாதுகாப்பது அனைவரதும் பொருப்பாகும். ஆனால் உரிய கண்காணிப்பு ஊக்குவிப்பு முறைகள் இல்லாதவிடத்து உரிமை மீறல்கள் தொடரும்.

இடம்பெயர்ந்தோருக்கும் அகதிகளுக்கும் நிவாரணம் வழங்குகையில் பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் போதுமான பாதுகாப்பு வழங்காமை தொடர்பாக ஐ.நா. மற்றும் ஏனைய மனித நேய அமைப்புக்களை பொருப்புக்கோரக் கேட்க முடியும். அதே போன்று அவர்களுடைய சகல திட்டமிடல் நடைமுறைப்படுத்தல்களிலும் பெண்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதை உறுதிசெய்ய வேண்டும். ஆனால் இடம்பெயர்ந்தவர்களதும் அகதிகளதும் ஆலோசனைகளும் சிறந்த கண்காணிப்பு முறைகளும் இல்லாதவிடத்து எவ்வித மாற்றமும் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

சமாதான பேச்சுவார்த்தைகளின் போது பெண்களுக்கெதிரான குற்றங்களுக்கு எந்தவொரு தரப்புக்கும் மன்னிப்பு வழங்கக் கூடாது

**எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்**

- அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்குவிப்புக்கள் இருப்பதோடு தண்டனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.
- சகல தரப்பினரதும் உரிமைகள் தொடர்பாக காட்டுகின்ற பொருப்புக்களை அரச சார்பற்ற நிறுவனங்கள் கண்காணிப்பதற்கு வாய்ப்புக் கிடைப்பதோடு அது செய்யப்பட வேண்டும்.
- முகாமினுள்ளே மனித நேய வேலைத்திட்டங்கள் திட்டமிடல், நடைமுறைப்படுத்தலில் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூடுதலான பங்களிப்பு வேண்டி நிற்க முடிவதோடு அவ்வாறு செய்ய வேண்டும்.
- நிவாரண, புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற வேலைத்திட்டங்கள் திட்டமிடலில் ஐ.நா. மற்றும் மனித நேய அமைப்புகள் தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனை பெற வேண்டும். அதே போன்று இடம்பெயர்ந்தவர்கள் அகதிகளின் உணர்வுபூர்வமான தேவைகளை சரியாகப் புரிந்துகொள்ளுமுகமாக ஆண், பெண் இரு பாலாரிடமும் கருத்து கேட்கப்படவேண்டும்.
- சகல ஐ.நா. மற்றும் மனிதநேய அமைப்புகளின் ஊழியர்களும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் தொடர்பான விடயங்களில் பயிற்சி பெற்றிருக்கவேண்டும். பெண்களினதும் பெண் பிள்ளைகளினதும் பாதுகாப்பு தொடர்பாக தற்போதுள்ள சட்டங்களை மீறுபவர்களுக்கு தண்டனைகள் வழங்கப்பட வேண்டும்.
- பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளை பாதுகாப்பதற்காக ஐ.நா.வின் மனிதநேய அமைப்புகளுக்கு மற்றும் ஏனைய நிவாரண அமைப்புகளுக்கு நிதி வழங்கும் நாடுகள் மேலதிக நிதி ஒதுகிகீடுகளை செய்ய வேண்டும். (தற்போதும் கூட இது ஒரு ஏற்றுக்கொள்ளப்படும் விடயமாக இருந்தும் நிதி பற்றாக்குறை, உத்தியோகத்தர்களின் அறியாமை இது தொடர்பாக முன்னுரிமை வழங்காமை போன்ற காரணங்களால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.





- அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா. சட்டதிட்டங்களுக்கிணங்க செயற்படுகின்றனவா என்பது தொடர்பான கண்காணிப்பு மீளாய்வு நடைபெற்று அதன் கண்டுபிடிப்புகள் சர்வதேச ரீதியாக பகிர்ந்துகொள்ளப்பட வேண்டும்.

**4. ஐ.நா.வின் அறிக்கை சமர்ப்பிக்கும் மற்றும் செயற்படுத்தும் முறைகளை பெண்களின் தேவைகளுக்கு உணர்வுபூர்வமாக மதிப்பளிக்கச்செய்தல்.**

இந்த விடயத்தின் முன்னேற்றங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தினும் அதை செயற்படுத்த வைக்கும் பிரதான பொருப்பு செயலாளர் நாயகத்தையே சாரும். ஆயுத மோதல்கள் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் தாக்கம் செலுத்தும் விதத்தை ஆய்வுசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு செயலாளர் நாயகம் பணிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று அமைதிகாப்பதில் பெண்களின் பாத்திரம் மற்றும் சமாதான செயற்பாடுகளில் மற்றும் முறண்பாட்டுத் தீர்வு முயற்சிகளில் பெண்களின் பாத்திரம் அதேபோன்று அமைதி காப்பு நடவடிக்கைகளில் பெண்கள் உள்வாங்கப்படுவது தொடர்பாக சபைக்கு முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டுள்ளார்.

**இதிலுள்ள தாக்கங்கள்**

பொதுவாக யுத்த சூழல்களில் பெண்களுக்கு தாக்கம் ஏற்படுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக மேல்மட்டங்களின் கவனம் செலுத்தப்பட்டுவந்த போதும் இந்த எழுத்து வடிவங்களை செயல் வடிவத்துக்கு கொண்டு வருவதற்கு ஏராளமான முயற்சிகள் தேவைப்படுகின்றன. செயலாளர் நாயகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு கால எல்லை குறிப்பிடப்படாமை இந்த விடயம் நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதை முறையாக, அவசரமாகப் பார்ப்பதற்கு தடையாக உள்ளது. இந்த அறிக்கைகளில் உள்;ர் வெளியூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் கருத்துக்கள் உள்ளடக்கப்படாமை முக்கியமாக பல பிரச்சினைகள் விடுபடுவதற்கு காரணமாக அமையலாம்.

**சேர்த்துக்கொள்ளப்படாத விடயங்கள்**

முதற்கட்ட ஏற்பாடு என்ற வகையில் இந்த யோசனைகள் பல விடயங்களை முன்வைக்கின்றன. ஆனால் கவனம் செலுத்த வேண்டிய விடுபட்ட விடயங்கள் மற்றும் குறைபாடுகள் உள்ளன.

1. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசுகளின் யோசனைகளின் அடிப்படையில் அனுபவம் வாய்ந்த பெண் சமாதான ஆர்வலர்கள் தொடர்பான தகவல் வங்கியொன்றினைத் தயாரித்தல்.

2. முறையான கண்காணிப்பாளர்கள் மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அமைதி காப்பு மற்றும் சமாதான துணைக்குழுக்களுக்கும் செயற்பாடாக பெண்கள் பாதுகாப்பையும் மனிதாபிமான பணிகள் திட்டமிடலில் பெண்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான அதிகாரமளிப்பது அத்தியாவசியம்.

3. முடிவெடுக்கும் திறன் உள்ள மூத்த பெண்களின் தேவைகளுக்கும் உணர்வுபூர்வமான ஆலோசகர்களை களப்பிரயாணங்கள் மற்றும் உண்மையறியும் வேலைத்திட்டங்களுக்கு சம்மந்தப்படுத்தல் முக்கியம்.

4. பெண்களுக்கு உணர்வுபூர்வமான தகவல்கள், தயார்படுத்தல், ஆபத்து எதிர்வுகூறும் குறிகாட்டிகள் போன்ற பெண்கள் முறண்பாட்டுச் சூழல்களுக்கு முகம்கொடுத்த விதம் போன்ற விடயங்களை சேகரிப்பதன் கூடாக முறண்பாட்டுச் சமூகத்தின் வெவ்வேறு

தரப்பாரால் எவ்வாறு உணரப்பட்டிருக்கிறது என்பதை அறிவதன் மூலம் மேலும் சிறந்த இணைந்த சமாதான முயற்சிகளை திட்டமிட வழி பிறக்கும். அந்த விடயம் இந்த யோசனைகளில் உள்ளடக்கப்படவில்லை.

5. கிராமவாசிகளைச் சுரண்டும் மற்றும் சட்டத்தை புறந்தள்ளும் அமைதிப்படை அங்கத்தவர்களுக்கு பொறுப்பு வழங்கும் அல்லது அவர்களுக்கு தண்டனை வழங்கும் ஒழுங்குவிதிகள் இதில் குறிப்பிடப்படவில்லை.

6. தகவல் அறிக்கைகள் தயாரிக்கும் போது அல்லது அறிக்கைகளை மீள்பரிசீலனை செய்யும் போது பெண்கள் குழுக்களினதும் சிவில் சமூகத்தினதும் கருத்துக்கள் கேட்கப்படுவது தொடர்பாக குறிப்பு எதுவும் இல்லை.

7. இந்த வேலைத்திட்டங்களை தலைமையகத்திலிருந்து கள மட்டத்திற்கும் கொண்டுசென்று சமாதான ஆர்வலர்களின், நிவாரண, புனர்வாழ்வு ஆர்வலர்களின், சேவைபெறுனர்களின் கருத்துகள், அபிலாஷ‘கள் மற்றும் அவர்களின் குரல்கள் ஐ.நா.வின் தலைமையக மேலதிகாரிகளுக்கு கேட்கச்செய்வதற்கான வழிமுறைகள் குறிப்பிடப்படவில்லை.

**எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள்**

அறிக்கை தயாரிப்பதற்கு அல்லது அதற்கான ஒரு வரைமுறை உருவாக்குகையில் அரச சார்பற்ற நிறுவனங்களிலான ஆலோசனை சபை ஒன்றின் மூலம் ஆலோசனை பெறுமாறு அங்கத்துவ நாடுகளை செயலாளர் நாயகம் கேட்க முடியும்.

அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பிராந்திய தேவைகளை அடிப்படையாகக் கொண்ட நிழல் அறிக்கைகள் தயாரிக்க முடியும்

ஐ.நா.வின் நிறுவனங்கள் (விசேடமாக பெண்களின் அபிவிருத்தி அமைதிகாப்பு மற்றும் பெண்களோடு தொடர்புபட்ட) அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனை சபை மூலம் உலகம் பூராவும் வாழும் பெண்கள் குழுக்களிடம் (இணையம் மற்றும் தேசிய ஐ.நா. காரியாலயங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி) கருத்துக்களை அறிந்து அவற்றை அறிக்கையில் சேர்க்கலாம்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் யோசனைகளை செயற்படுத்த வைப்பது தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மதிப்பீடுகளை தொடர்ந்து செய்துகொண்டு போகின்ற அதேவேளை காத்திரமான உறுதியான செயற்பாடுகளையும் வேண்டி நிற்க வேண்டும்.

## (3) வரலாற்று பதிவுகளும் நிகழ்கால நிலமையும் (1)

இலங்கையில் காலணித்துவ நாடாக மாற்றமடைந்து நூறு வருடங்கள் செல்லும் வரையில் வெளிப்படையாக அரசியல் செயற்பாடுகளில் இணைந்துக் கொண்ட பெண்களின் எண்ணிக்கை மிக குறைவானதாகவே இருந்தது. . ஆனால் வரலாற்றில் பெண்கள் செய்த வீரதீர செயல்கள் அநேகமாக வரலாற்று ஏடுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டுகளின் தொடக்கத்தில் தேசிய சுதந்திர போராட்டம் தொடர்பான கருத்துக்கள் பரவலாக பேசப்பட்ட காலகட்டங்களில் இந்திய பெண்களின் போராட்டத்தின் ஊடாக பெண்களின் அரசியல் எழுச்சி பெற தொடங்கியது. இந்த காலகட்டத்தில் டொனமூர் அரசியலமைப்பின் அடிப்படையில் இலங்கையில் குறிப்பிட்ட செல்வந்தர்களுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமை கிடைக்கப்பெற்றிருந்தது. ஆனால் அவ்வாறு கிடைக்கப்பெற்ற வாக்களிக்கும் வாய்ப்பானது அந்த குடும்பங்களில் வாழ்ந்த எந்த ஒரு பெண்ணுக்கும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த காலகட்டத்தில் சமூகத்தல் பலதரப்பட்ட ஆண்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொடுத்து ஆண்களின் பலத்தை திடப்படுத்தினாலும் அச்சர்ந்தர்ப்பத்திலும் இந்த உரிமையை எந்த ஒரு பெண்ணுக்கும் பெற்றுக்கொடுக்கவில்லை. ஒரு வாக்காளராதலுக்கான வட்டபூர்வ தகுதியில் " பெண்ணாக இருத்தல் கூடாது " என்ற பந்தியானது பிரதான கருத்தாக உள்ளடக்கப்பட்டிருந்தது. குடும்ப வருமானமும் வாக்கை பாவிப்பதற்கான ஒரு தகுதியாக இருந்ததுடன் 1924ல் யாப்பு சபை அமைக்கும் போது பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 4 % மாகும்.

இந்த காலகட்டங்கள் வரை எங்கள் நாட்டில் பல இடங்களில் மேலோங்கி வந்த தொழிலாளர் போராட்டங்கள் மற்றும் ஏனைய நாடுகளில் பெண்களின் வாக்குரிமை தொடர்பாக பெண்கள் முன்னெடுத்துச் சென்ற போராட்டங்களின் தாக்கமானது இலங்கை பெண்களின் வாக்குரிமைக்காக ஒன்றினைந்து போராடும் வேலைத்திட்டத்தை ஊக்குவித்தது. பெண்கள் தமது வாக்குரிமையை பெற்றுத்தருமாறு வேண்டுகோள்விடுத்து பல தரப்பட்டவர்களிடம் கையொப்பத்தை பெற்று டொனமூர் ஆனைக்குழுவிற்கு எழுத்து வடிவில் அறிக்கையை ஒன்றை சமர்ப்பித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பெண்களுக்கு வாக்குரிமையை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக டொனமூர் ஆனைக்குழுவினுள் கட்சி மற்றும் எதிர்கட்சிகளிடம் கருத்துக்கள் வினவப்பட்டது. பெண்கள் மற்றும் ஆண்கள் முன்னெடுத்துச் சென்ற போராட்ட வேலைத்திட்டத்தின் பலனாக 1931 ல் 21 வயதிற்கு கூடிய அனைத்து ஆண் மற்றும் பெண்களுக்கு வாக்குரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டது. இது இலங்கை அரசியல் வரலாற்றில் பெண்கள் பெற்றுக்கொண்ட பாரிய வெற்றியாகும்.

முதலாவதாக அரச மந்திரி சபையில் பெண்கள் தேர்வு செய்யப்பட்டது 1931ல் ஆகும். சிங்கள் மற்றும் தமிழ் பெண்கள் இருவர் பாராளமன்றத்திற்கு தேர்வாகினர். அதன் விகிதாசாரம் 4 % மாகும். 1936 ல் ஒரு பெண் தேர்வானதுடன் அதன் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் பெண்கள் தோல்வியடைந்ததுடன் 1947 வரை அரச மந்திர சபைக்கு பெண் பிரதிநிதிகள் எவரும் இருக்கவில்லை.

முதலாவது பாராளமன்ற பிரதிநிதிகள் 95 பேரில் மூவர் பெண்களாவர். அந்த மூன்று பேர் இடதுசாரி முன்னியை பிரிதிநிதித்துவம் செய்தவர்களாகும்.

**பாராளமன்றத்தினுள் 1947 - 2001 இடைத்தேர்தலுக்கான வேட்பாளர்களும் தெரிவான பிரதிநிதிகளும்.**

| தேர்தல் காலம் | பெண்களின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | பெண் வேட்பாளர் | விகிதாசாரம் | தெரிவானவர்களின் எண்ணிக்கை | விகிதாசாரம் |
| 1947 | 30 | 1.1% | 02 | 2.1% |
| 1952 | 09 | 2.9% | 02 | 2.1% |
| 1956 | 05 | 2.1% | 04 | 3.2% |
| 1960 மார்ச் | 16 | 1.7% | 03 | 1.9% |
| 1960 ஜுலை | 05 | 1.3% | 03 | 1.3% |
| 1965 | 14 | 2.8% | 06 | 2.6% |
| 1970 | 14 | 3.2% | 06 | 3.9% |
| 1977 | 14 | 1.8% | 14 | 4.8% |
| 1989 | 52 | 3.0% | 13 | 5.3% |
| 1994 | 52 | 3.6% | 12 | 5.3% |
| 2000 | | | 09 | 4% |
| 2004 | 375 | 6.6% | 13 | 5.8% |
| 2010 | | | 13 | 5.8% |

பாராளமன்றத்தினுள் பெண்களின் விகிதாசாரம் 1947 - 2000 வரையான 58 வருட காலத்தில் 2.7% வீதமே அதிகரித்துள்ளது.

## உள்ளூராட்சி சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவம்

## 1993 -- 2000 வரை

| மாகாணம் | 1993 | | 1999 | | 2004 | |
|---|---|---|---|---|---|---|
| | **பெண்** | **ஆண்** | **பெண்** | **ஆண்** | **பெண்** | **ஆண்** |
| மேல்மாகாணம் | 07 | 97 | 02 | 102 | 06 | 98 |
| வடமத்திய | 04 | 32 | 01 | 33 | 01 | 32 |
| வடமேல் | 03 | 49 | 03 | 48 | 04 | 48 |
| ஊவா | 0 | 34 | 01 | 33 | 01 | 34 |
| மத்திய | 1 | 57 | 03 | 55 | 04 | 53 |
| தெற்கு | 02 | 53 | 01 | 54 | 01 | 54 |
| சப்ரகமுவ | 01 | 43 | 01 | 42 | 01 | 42 |
| **மொத்த எண்ணிக்கை** | 18 | 365 | 12 | 365 | 19 | 361 |
| % | 4.7% | 95.3% | 3.2% | 96.8% | 5.0% | 95.0% |

1987 மாகாண சபை சட்டத்தின் அடிப்படையில் நிறுவப்பட்ட மாகாண சபைகளில் முதலாவது மாகாண சபைத் தேர்தல் 1989 லேயே நடைபெற்றது. 1987 மொத்த பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை 54 இருந்தபோதிலும் 1993ல் அது 73 ஆக அதிகரித்தது. அவ்வாறாயினும் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் மாற்றமேதும் ஏற்படவில்லை. 1993ல் 18ஆக இருந்த பெண் பிரதிநிதித்துவம் 1998ல் 12 ஆக வீழ்ச்சியடைந்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. 2004ல் நடைபெற்ற தேர்தலில் அதன் விகிதாசாரம் 5% மாகும். அதிகர்த்துள்ளமை மிக குறைந்தளவிலேயே காணக்கூடியதாக இருந்தது.

உள்ளூராட்சி சபைகளில் உள்ள பெண்கள் பிரதிநிதித்துவம் பின்வருமாறு. இந்த புள்ளி விபரங்களின் அடிப்படையில் பாராளுமன்றம் மற்றும் மாகாண சபைகளையும் விட பெண்களின் பிரதிநிதித்துவம் இங்கு குறைவாக உள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

### உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் பிரதிநிதித்துவம்

| உள்ளூராட்சி மன்றம் | வருடம் | மொத்த எண்ணிக்கை | பெண்களின் எண்ணிக்கை | பெண்கள் விகிதாசாரம் |
|---|---|---|---|---|
| **மாநகரசபை** | 1976 | 176 | 5 | 2.8% |
| | 1982 | 233 | 3 | 1.3% |
| | 1991 | 207 | 6 | 2.9% |
| | 1997 | 261 | 9 | 3.4% |
| | 2006 | 330 | 10 | 3% |





| | | | | |
|---|---|---|---|---|
| நகரசபை | 1979 | 305 | 7 | 2.3% |
| | 1982 | 347 | 6 | 1.7% |
| | 1991 | 241 | 6 | 2.5% |
| | 1997 | 340 | 9 | 2.6% |
| | 2006 | 379 | 13 | 304% |
| பிரதேச சபை | 1991 | 2674 | 42 | 1.6% |
| | 1997 | 3192 | 55 | 1.7% |
| | 2006 | 3242 | 51 | 1.6% |

## (4) 1.பெண்களும் வரலாற்று எண்ணக்கருக்களும்

மனித சமூகம் எந்த கால கட்டத்தில் உருவானது என நூறு சதவீதம் திட்டவட்டமாக கூற முடியாதென பலரின் கருத்தாக இருப்பினும் மானிட விஞ்ஞானிகள் அந்த கேள்விக்கு மிக முக்கியமான ஒரு விடையை தந்துள்ளனர். எவ்வாறாயினும் மானிட சமூகத்தின் ஆரம்பத்துடன் மனிதனால் ‘‘கட்டியெழுப்பப்பட்ட’’ அனைத்தும், கலாச்சாரமாக தற்போதைய சமூகம் ஏற்றுக் கொள்கின்றது. அதில் பௌதீக பொருட்களிலிருந்து கிராமீய பாடல், கூத்து ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்படும்.

மனிதனால் கட்டியெழுப்பப்பட்ட பௌதீக பொருட்கள் அல்லாத அனைத்து விடயங்களிலும் சமயம் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றதாக பலரின் கருத்தாகும். அதற்கு காரணம் சமயம் முழு சமூக்திற்கும் அழுத்தம் கொடுக்கவல்லதாக இருக்கின்ற படியாலாகும். இன்று உலகம் முழுதும் உள்ள சமயங்களை உற்று நோக்கி பார்க்கும் போது அதன் ஆழமான அடிப்படை விடயங்கள் ஒரே விதமாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக பௌத்த சமயத்தில் மிருகங்களை துன்புறுத்தல் தவிர்க்கவேண்டிய ஒரு பாவ காரிமாக கூறப்பட்டுள்ளதுடன் இந்து மதத்தில் மிருகங்களை பூஜிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.(உதா:கோமாதா-பசு)இஸ்லாம் மதத்தில் தனக்கு உணரக்கூடிய வேதனைக்கு மிருகங்களின் வேதனையை ஒப்பிட்டுள்ளது. இவை அனைத்திலிம் மிருகங்களை கொலை செய்வதை தடுப்பதற்காகவே அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

இதனைப்போன்றே அனைத்து மதங்களிலும் மிகவும் சமமான கருத்துக்களை வகிக்கும் ஒரு விடயம் ‘‘பெண்கள்’’ பற்றியதாகும். தற்போது உலகில் அதிகம் பின்பற்றப்படும் அனைத்து சமயங்களிலும் பெண்களை பற்றி கூறப்பட்டுடள்ளது. இவைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்க்கும் போது சமமான கருத்துக்களாகவும் பெண்களை மிக உயர்வான இடத்தில் வைத்திருப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனை உறுதிப்படுத்துவதற்கு ஒரு சில விடயங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

## பௌத்த சித்தாந்தமும் பெண்களும்

பௌத்தர்களின் மிக உயர்ந்த அடைவாக புத்தத்துவத்தை கூறலாம் .இந்த நிலையை அடைந்த "புத்த பெருமானை" இன்று பௌளத்த மக்கள் கடவுளாக போற்றுகின்றனர்.அன்னார் புத்தத்துவம் அடைவதற்கு முன் சித்தார்த்த இளவரசனாக இருந்த காலத்தில். தான் புத்தத்துவத்தை நோக்கி தவமிருக்க தன் தாயிடம் வரத்தையும் ஆசியையும் பெற்றார். புத்தத்துவம் அடைந்த பின் அப்போது காலம்சென்று சுவர்கத்தை அடைந்திருந்த தன் தாயாருக்கு தான் முதல்முறையாக தர்மத்தை போதித்து விட்டு வந்தார் என வரலாற்று கதைகளில் கூறப்பட்டுள்ளது.

இவ்விரண்டு சந்தர்ப்பங்களையும் பார்க்கும் போது புத்தர் தவமிருக்க தன் தாயிடம் வரம் கேட்டதும், முதல் தர்ம போதனையை தன் தாயிற்காக போதித்தமையும் புனித புத்தத்துவத்தையும் விட தன் தாயிற்கு அதாவது ஒரு பெண்ணுக்கு மதிப்பு கொடுத்தமையை காணக்கூடியதாக உள்ளது. புத்தத்துவம் பெற்ற புத்தரே தாயை மதித்த காரணத்தினாலேயே தாய் "வீட்டின் புத்தராக" போற்றப்படுகின்றார்

பௌத்த இலக்கியத்தில படி சித்தார்த்த குமாரனின் தாய் இறந்த பின் அவரை வளர்த்தெடுத்தது" பிரஜாபதி கோதமி" எனும் சிற்றண்ணையென கூறப்பட்டுள்ளது. பிற்காலத்தில் அவர் பெண்களுக்கும் பிக்கு நிலையை பெற புத்தரிடம் அனுமதி கேட்டதன் மூலம் அவர் பெண்களின் சமவுரிமையை பெற உறுதுணையாக நின்றார். அன்று பாரத பிராமண குலத்தில் ஒதுக்கி வைக்கப்படடுள்ள பெண்களுக்கு புத்த பகவானின் காலத்தின் பின்னரே விடுதலை கிடைத்துள்ளது.

அனைத்தயும் இழந்த பட்டாச்சாரா எனும் பெண் தனது வேதனையை தனிக்க அன்று புத்தரை நாடிச்சென்றார். தன் துயரங்களை தவிர்த்து பிக்குனியாக மாற்றமடைந்து புனிதத்துவம் அடையும் வழியை புத்தர் அவருக்கு போதித்தார்.

இவ்வாறு தாழ்த்தப்பட்ட பெண்கள், அநாதைகளான பெண்கள், உயர்குல பெண்கள், மற்றுமின்றி விபச்சாரிகள் போன்ற சமூகத்தில் பல்வேறு அந்தஸத்துகளிலும் சமூக மட்டங்களிலும் வாழ்ந்த அநேகமான பெண்களுக்கு புத்த பகவான் வழிகாட்டி உதவியுள்ளார்.

இதன்படி அன்றைய பாரதத்தில் பல்வேறு சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் பின்னனியின் கீழ் பலவிதமான துன்பங்களை அனுபவித்து வந்த பெண்களுக்கு உண்மையான விடுதலையையும், மனித உரிமைகளையும் அனுபவிக்கும் வாய்ப்பை பெற்றுக்கொடுக்க முன்னோடியாக இருந்தவர் புத்த பகவான் என்பது தெளிவாகின்றது. இதன்படி பௌத்த மதமானது ஆரம்பம் முதல் பெண்களுக்கு சாதகமாக உள்ளதென்பதை காணக்கூடியதாக உள்ளது.

**திரு. நயன பிரபாத் தயானந்த**

**இளைஞர் விவகார மற்றும் கலாசார உத்தியோகத்தர்**

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**பொலொன்னருவை**

# பெண் உரிமை பேணும் இஸ்லாம்

- மனித வாழ்க்கையில் பல்வேறு கோணங்களில் இஸ்லாம் தர்மம் சீர்ப்படுத்தபடுகிறது.
- ஜாஹிலியாக் காலத்தில் தமது அந்தஸ்து மற்றும் உரிமைகளை இழந்திருந்த பெண்களுக்கு சமூக அந்தஸ்த்துக்களையும் உரிமையையும் வழங்கி கௌரவித்தது.
- உலகத்திற்கு வழிகாட்ட வந்த நபிமார்களையும், உத்தமர்களையும் இந்த ஈன்றெடுத்தவர்கள் பெண்களாவர்.
- இறைÀதர் (ஸல்) அவர்களின் நபித்துவத்தை முதலில் ஏற்றுக்கொண்டு தைரியமூட்டியது அவரின் மனைவியாகிய கதீஜா (ரழி) உம்மாவாகும்.
- இஸ்லாமிய யுத்தங்களில்கூட முஸ்லிம் வீரர்களுக்கு பணியாற்றவும், காயமுற்றவர்களுக்கு சிகிச்சையளிக்கவும் பெண்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.
- இஸ்லாம் தர்மத்தில் பெண்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் ஒடுக்கப்படவில்லை.ஆண்களுக்கு நிகராக பெண்களை சமமாக மதிப்பதுடன் பெண்களின் உடல், உள பலவீனங்களை கருத்திற்கொண்டு அவர்களின் கடமைகளையும், உரிமைகளையும் கட்டுப்படுத்துகின்றது.
- இஸ்லாம் தர்மமானது பெண்களையும் ஆண்களைப் போன்ற ஒரு மனிதப்பிறவியாவே கருதுகின்றது. இதை அல்குர்ஆன் "அவர் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து உற்பத்தி செய்தான்" (04-01) என்று கூறுகின்றது.
- பெண்கள் கண்ணியமானவர்கள் . யாரேனும் கற்புள்ள பெண்கள் மீது அவÀறு சொன்னால் அதை நிரூபிக்க நான்கு (4) சாட்சிகளை கொண்டு வராவிட்டால் அவருக்கு எண்பது (80) கசையடி கொடுத்து தண்டிக்கவும்,அதற்கு பின்னர் கொண்டு வரும் சாட்சியத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என (24-04) ல் அல்குர்ஆன் வசனம் விளக்குகின்றது.
- தாயின் பாதத்தின் கீழ் சுவர்க்கம் உண்டு என பெண்களை கௌரவப்படுத்தியுள்ளது.
- எவர் தனது மனைவியிடத்தில் கண்ணியமாக நடந்துகொள்கின்றாரோ அவரே உங்களில் சிறந்தவராவார் என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்.
- நபியவர்கள் தமது இறுதி ஹஜ் உபதேசத்தில் பெண்களைப்பற்றி விசேடமாக குறிப்பிட்டுள்ளார். அவர்களை நல்ல முறையில் நடத்துமாறும், அல்லாஹ்வின் மனித சொத்துக்கள் என்றும், ஆண்களுக்கு பெண்கள் மீது உரிமை இருப்பதுபோல் பெண்களுக்கும் ஆண்கள் மீது சில உரிமைகள் உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளார்.
- மனிதன் செய்கின்ற உலக விவகாரங்களுக்கு நற்கூலி, தண்டனை இரண்டிற்கும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமாகவே வழங்கப்படும்.யாருக்கும் விசேட சலுகை வழங்கப்படமாட்டாது என அல்குர்ஆன் தெளிவுப்படுத்துகிறது.
- உழைக்கவும்,சொத்துக்களை பெற்றுக்கொள்ளவும் அவற்றை தாம் விரும்பியப்படி கையாளவும் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை உண்டு (04-32)





- சொத்துக்களுக்கு உரிமை கோருவதற்கு,தொழில் செய்வதற்கு,பேசுவதற்கு , எழுதுவதற்கு உரிமை உண்டு. அதே போன்று குடும்ப பரிபாலனம், இல்லர வாழ்க்கை முதலிய விடயங்களில் பெண்களுக்குரிய பிரச்சினைகள், சிரமங்கள் அகற்றப்பட்டுள்ளது.
- அறிவைத் தேடுவது முஸ்லிமாகிய ஆண், பெண் இருவரினதும் கடமை என்று நபி(ஸல்) கூறியுள்ளார். ஆணும்,பெண்ணும் மனித இனத்தில் ஒரே மாதிரியான இரு பாகங்களாகும் என்றும் உடலை போர்த்திக்கொள்ளும் ஆடை ஒருவருக்கு அபயமும்,பாதுகாப்பும்,அழகும் தருவதுபோல பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்பாகவும், வசீகரமாகவும் இருக்க வேண்டுமென (02-187) ல் அல்குர்ஆன் தெளிவுப்படுத்துகிறது.
- பெண்களுடைய வாழ்க்கையில் மிக முக்கிய விடயமான திருமண விடயத்தில் பல சந்தர்ப்பங்களில் பெண்களின் அனுமதியின்றி திருமணம் செய்து கொடுப்பதை இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை, தன்னை விடுவித்துக்கொள்ள அப்பெண்ணுக்கு உரிமையுண்டு.
- ஆண்மீக ரீதியில் ஆண்களைப்போல பெண்களுக்கும் இறைவழிப்பாட்டில் உயர்ந்த நிலையை அடைய இஸ்லாம் வழிவகுத்துள்ளது.
- பொது இயல்பான உடல், உள ரீதியான சில பலவீனம் காரணமாக சில பொருப்பான விடயங்களில் பெண்களைவிட ஆணுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

## பின்வரும் பெண்மணிகள் சாதனையாளர்கள் என வரலாற்றில் கூறப்படுகிறார்கள்

1. **கல்வி**

**ஆயிஷா (ரழி)**

- நபியவர்களின் மனைவி: அல்குர்ஆன், அல்ஹதீஸ் மார்க்கத் தீர்ப்புச் சொல்வதில் மிகப்பெரிய விரிவுரையாளராகக் கருதப்படுகிறார்.

**அண்னை ஷபிய்யா (ரழி)**

- அன்றைய அறியாமைக் காலத்தில் அரபிகளின் எழுத்தறிவு உள்ளவர்கள் எத்தனை பேர் என்பதை விரல்விட்டு எண்ணக்கூடியவர்களில் இவரும் ஒருவர். மிகச் சிறந்த கவிதையாளராகவும் கருதப்படுகின்றார்.

**பாத்திமா (ரழி)**

- நபி (ஸல்) அவர்களுடைய மகள். நான்காம் கலீபாவான அலி (ரழி) அவர்களின் மனைவி. பெண்களின் ஈருலக தலைவியும் ஆவார்கள். அதிகமான கல்விச் சேவையில் ஈடுபட்டார்கள்.

**ஸைனப் அல் கஸ்ஸாவி**

- 20ம் நூற்றாண்டின் பெண் கல்வியாளர் என வர்ணிக்கப்படுகின்றார்.

2. **வீர மங்கையர்**





**அன்னை சுமைய்யா (ரழி)**

- இஸ்லாத்திற்காக முதன் முதல் உயிர் கொடுத்த உத்தமி. இவர்கள் அடிமையாக இருந்த நிலையில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள். இதற்காகவேண்டியே கொள்ளப்பட்டார்கள்.

**உம்மு அம்மாரா (ரழி)**

**அஸ்மா பின்தி அபூபக்கர் (ரழி)**

- ரீம் ரியாஸி என்பவர் தனது மண் மீட்புக்காக பலஸ்தீனத்திலே உயிரை நீத்தார். மரணிக்கும் போது இவரின் வயது 22ஆகும். இவர் இரண்டு குழந்தைகளின் தாய்.

**3. உரிமக்காக உயிர்த் தியாகம் செய்தவர்கள்.**

**மர்வா அல் ஷெர்பினி**

- இவர் 2009ம் ஆண்டு ஜுலை 1ம் திகதியன்று ட்ரெஸ்ட்ரன் பிராந்திய நீதிமன்றத்தில் வைத்து 18 தடவைகள் கத்தியால் குத்தப்பட்டு உயிர் துறந்தார். இதற்கான காரணம் தனது மத கலாச்சார உடையான உடலை மறைக்கும் கறுப்பு ஆடை அணிந்திருத்தமையால் ஏற்படட்ட தகராரினால் ஜேர்மனியைச் சேர்ந்த அலெக்ஸ் என்பவனால் கொலைசெய்யப்பட்டார்.

எனவே மேற்கூறிய பெண்மணிகள் அனைவரும் பெண்ணினத்தின் முன்மாதிரியானவர்கள் ஆவார்கள்.

**மௌலவி திரு .நலீர் முகம்மது – திருகோணமலை**

## 3. கிருஸ்தவ மதத்தினுள் பெண்கள்

வரலாற்றை முழுதும் அவதானிக்கும் போது அன்றைய சமூக நிலைப்பாடுகளையும் தாண்டி கிருஸ்தவ மதத்தினுள் பெண்களுக்கு விசேட இடம் கொடுக்கப்பட்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது. இதில் விசேடமாக புனித அன்னை மரியாளுக்கு செலுத்தப்படும் கௌரவத்தையும் அதனோடு தொடர்புடைய புனித ஆனா முனிவர் போன்று புனிதத்துவம் பெற்ற பெண்கள் பல உள்ளனர்.

அவ்வாறே அண்மை காலம் வரையிலும் கிருஸ்தவ தேவைலயங்களில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்ள பெண்களுக்கு அனுமதி கிடைக்காவிடினும் கண்ணியாஸ்திரிகளுக்கு அருட் சகோதரிகளாகும் வாய்ப்பு அன்று தொட்டு பெண்களுக்கு வழங்கப்பட்டமையால் பெண்களுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு கிடைத்ததுடன், இதனூடாக சமூகத்தில் மிக முக்கியமான நபர்களாகும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

**விசேட *பெண்மணிகள்***

1. *அன்னை மரியாள்*
2. *புனித அண்ணம்மாள்*
3. *அன்னை தெரேஸா*
4. *மாரி கியுரி அம்மையார்*
5. *புளோரனஸ் நைட்டிங்கேள்*
6. *மடு மாதா*

## *4.இந்து மதத்தினுல் பெண்கள்*

இந்து மதத்தை மேலோட்டமாக நோக்கும் போது வரலாற்று முதல் அந்தந்த காலகட்டத்தின் சமூக கலாச்சார கட்டமைப்புகளோடு பெண்கள் மிகவும் நெருக்கமான தொடர்புடையவர்களாக காணப்பட்டனர். அதன் காரணமாக இந்து விதவைகளுக்கு மிக கடினமான கட்டுப்பாடுகளுடன் வாழும் சூழ்நிலை ஏற்பட்டதுடன் உடன் கட்டை ஏறுதல் போன்ற துர்பாக்கிய நிலைகளுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

அவ்வாறாயினும், இந்து மதத்தில் பெண் தெய்வங்களாக போற்றும் நிலமையும் இருப்பதுடன் மாரியம்மன், துர்க்கை உட்பட பல பெண் தெய்வங்களுக்கு விசேட வழிபாடுகளுடன் போற்றி வருவதையம் காணக்கூடியதாக உள்ளது. இந்து மதத்தை தழுவிய இல்லங்களின் பெண்கள் சமய வமிபாடுகளை மேற்கொள்வதுடன், வீடுகளிலுள்ள தாய் மற்றும் பாட்டிமார்கள் அதிக மரியாதைக்கு ஆளாகின்றனர்.

**விசேட *பெண்மணிகள்***

1 அம்மன்
2 துர்க்கை
3 பார்வதி
4 லக்ஷ்மி



